

# புலப்படாத கலாசார மரபுரிமையும், பால்நிலையும



புலப்படாத கலாசார மரபுரிமை

United Nations
Educational, Scientific and
Cultural Organization

ichcap

International Information and Networking Centre
for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region
under the auspices of UNESCO

United Nations
Educational, Scientific and
Cultural Organization

Sri Lanka
National Commission
for UNESCO





© UNESCO / Danson Siminyu

# புலப்படாத கலாசார மரபுரிமையும், பால்நிலையும



© Umumura Yutaka



© Sa'id Azadi



© Fumiko Ohinata

Translator: **Sabapathy Sivagurunatha**
Proofreader: **Dhammika Wijayasinghe**

## பால்நிலை அடையாளங்களை உருவாக்குதல

பால்நிலையுடன் தொடர்பான பெறுமதிகளும், பாங்குகளும் மற்றும் விதிகளும் சமூகங்களினதும், சனசமூகங்களினதும் மற்றும் குழுக்களினதும் மத்தியில் பன்னிலையானவையாகும். சகல புலப்படாத கலாசார மரபுரிமை வெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள சனசமூகமொன்றில், பால்நிலைக் குழுக்களுக்கு இடையிலும், அவற்றினுள்ளும் வகிபங்குகள், உறவுகள் தொடர்பான அறிவினையும், பாங்குகளையும் காவுவதுடன், பரப்புகின்றன. அத்தகையதொரு வழியில், பால்நிலை வகிபங்குகளையும், அடையாளங்களையும் உருக்கொடுப்பதற்கும் அத்துடன் அவற்றைப் பரப்புவதற்கும் சிறப்புரிமையிலான சூழமைவொன்றாக புலப்படாத கலாசார மரபுரிமை விளங்குகின்றது. எனவே, புலப்படாத கலாசார மரபுரிமையும், ஒருவரின் பால்நிலை அடையாளத்தின் கட்டுமானமும் பிரிக்க முடியாதவையாகும்.

*பாரம்பரியமான உணவுவழிகள் பெருமளவு சனசமூகங்களில் ஓர் அதிகார எல்லையிலானதாகும். இங்கு பெண்கள் முக்கியமானதொரு வகிபங்கினை ஆற்றுகின்றார்கள். தாய்மார்களுக்கும், மகள்மாருக்கும் இடையிலான சமூக உறவே இந்த நடைமுறைக்கு மையமானதாகும். பணியை மேற்கொள்வதில் மகள்மார் அவதானிக்கின்றனர், கற்கின்றனர் அத்துடன் தமது தாய்மார்களுடன் இணைந்து கொள்கின்றார்கள். படிப்படியாகவும், மீட்டுரைப்பதன் ஊடாகவும் இந்த குறிப்பான வகிபங்கினை எடுத்துக்கொள்ளும் போது அது பெண்களாக அவர்களது அடையாளத்தின் பங்காக அமைகின்றது.*



© UNESCO / Danson Siminyu



© 2008 by Ministry of Culture - Photograph: Iris Biskupic Basic



© 2008 by Ministry of Culture - Photograph: Iris Biskupic Basic

*ஓமானில் Bedouin சனசமூகங்கள் மத்தியில் பாரம்பரியமான செயற்பாடுகளிலும், களியாட்டங்களிலும் ஒட்டகங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன. ஒட்டக வளர்ப்பு தொடர்பான கைவினைகளில் அவசியப்பட்ட கடிவாளங்களையும், உதிரிப்பாகங்களையும் உற்பத்தி செய்யும் போது, அது தொடர்பான தமது வகிபங்கை ஆண்களும், பெண்களும் கொண்டுள்ளனர். பெரும்பாலான நெசவு செய்யப்படுகின்ற விடயங்களைப் பெண்கள் செய்யும் அதேவேளை, மரங்களைச் செதுக்குபவர்களாகவும், வெள்ளிவேலை செய்பவர்களாகவும் ஆண்கள் விளங்குகின்றார்கள். குரோஷியா, Hrvatsko ஜுயபழசதநஇல் கிராமவாசிகளினால் சிறுவர்களின் மரப்பலகையிலான விளையாட்டுப் பொருட்களின் பாரம்பரியமான தயாரிப்பில் இதையொத்ததொரு சரீர உழைப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்தியிருந்த தொழில்நுட்பமொன்று சந்ததிகளாக குடும்பங்களினுள் கைமாற்றப்பட்டுள்ளன. மென்மையான அலரி வகைச் செடியையும், சுண்ணாம்பையும், பீச் மரத்தையும் மற்றும் மேபிள் மரத்தையும் சேகரிப்பதுடன், பாரம்பரியமான கருவிகளைப் பயன்படுத்தி அவர்கள் அவற்றை உலர வைத்து, துண்டாக்கி, வெட்டி, விளையாட்டுப் பொருட்களாகச் செதுக்குகின்றார்கள். அடுத்து, பெண்கள் தமது 'கற்பனையிலிருந்து' புதுமையான விதத்தில் மலர்களுடன் அல்லது கேத்திரகணித சித்திர வேலைப்பாடுகளுடன் வர்ணங்களைப் பூசி, விளையாட்டுப் பொருட்களை அலங்கரிக்கின்றார்கள்.*

புலப்படாத கலாசார மரபுரிமையின் குறிப்பான வெளிப்படுத்தல்களுக்கான அடைதல் அத்துடன் அவற்றில் பங்கெடுப்பு ஆகியனவும் பால்நிலையினால் நிர்ணயிக்கப்படுகின்றன. உதாரணமாக, முழு நிறைவிலானதும், பால்நிலையிலானதுமான வகிபங்குகளுடன் குறிப்பிட்ட சரீர உழைப்பின் பிரிவுகள் மீது அனேகமாகத் தங்கியுள்ளன.

மறுபுறத்தில், சமூக நடைமுறைகள், களியாட்ட நிகழ்ச்சிகள் மற்றும் அரங்காட்டுக் கலைகள் ஆகியன பால்நிலை வகிபங்குகள் அத்துடன்∴ அல்லது சமத்துவமின்மைகள் தொடர்பிலான பிரச்சனைகள் உட்பட கரிசனையிலான சனசமூகத்தின் பிரச்சனைகளையும், சமூக தப்பெண்ணங்களையும் மேடையேற்றுவதற்கான தருணங்களாக விளங்க முடியும். உதாரணமாக, பெருமளவு களியாட்டப் பாரம்பரியங்களிலும், கச்சேரிகளிலும் பால்நிலை வகிபங்குகளுக்கும் மக்கள் மாறுவதுடன், அவற்றை மீறிச்செல்வதும் உண்டு. இவ்வழியில், இடைவெளிகளை சனசமூகங்கள் உருவாக்கி, இங்கு பால்நிலை வகிபங்குகள் பற்றிய விழிப்பியலை அவை உருவாக்குகின்றன, பிரதிபலிப்பினை வசதிப்படுத்துகின்றன, அத்துடன் பால்நிலைப் பாங்குகளுக்கு சவால்விடுக்கின்றன.

## வெளிப்படுகின்ற பால்நிலை வகிபங்களும், உறவுகளும்

மனிதப் பிறவிகள் பொதுவாக சிறுவர் பிராயத்திலிருந்தே பால்நிலை வகிபங்குகளை தன்மயமாக்கி, கற்றுக்கொள்கின்றன. எனினும், பால்நிலை வகிபங்குகள் நிலையானவை அல்ல. புலப்படாத கலாசார மரபுரிமை போன்று, அவை தொடர்ந்தும் மாற்றமடைந்து, புதிய சூழ்நிலைகளுக்கு அனுசரிக்கின்றன. காலப்போக்கில் தமது பால்நிலை வகிபங்குகளையும், பாங்குகளையும் சனசமூகங்கள் 'கலந்தாய்வதுடன்' கடந்த காலத்தில் ஒரு பால்நிலைக் குழுவின் பிரத்தியேகமான ஆதிக்க எல்லையாக இருக்க பெருமளவு பால்நிலை-குறிப்பான பாரம்பரியங்கள் அது முதல் வேறு பால்நிலைக் குழுக்களை உள்ளடக்குவதற்காக சனசமூகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பால்நிலை-தொடர்பிலான பெறுமதிகளையும் மற்றும் பாங்குகளையும் அத்துடன் அவற்றின் உருமாற்றத்தினையும் உருவாக்குவதிலும், பரப்புவதிலும் முக்கியமான வகிபங்கொன்றை புலப்படாத கலாசார மரபுரிமை ஆற்றுகின்றது. குறிப்பான அச்சுறுத்தலொன்றுக்கு தீர்வொன்றைக் கண்டறிதல் போன்றவாறு நடைமுறையொன்றை மாற்றுவதற்கான செயல்நோக்கம் பயன்வழியிலானதாகும். சமமான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக அது தத்துவங்களின் அடிப்படையிலானதாகவும் விளங்க முடியம். புலப்படாத கலாசார மரபுரிமையைப் பரப்புவதில் பால்நிலைப் பாங்குகள் செல்வாக்கு செலுத்துகின்ற



© Umumura Yutaka

வியட்நாமிலிருந்து Châu van shamans என்ற பாடலின் சடங்கில், பாரம்பரியரீதியிலான 'ஆண்' வகிபங்குகள், ஆடை மற்றும் நடத்தை அத்துடன் மறுதலை ஆகியன மீது பெண் ஊடகங்களை எடுத்து, பால்நிலை வகிபங்குகள் தலைகீழாக மாற்றப்படுகின்றன. இதேபோல, Kabuki ஒரு ஜப்பானிய பாரம்பரியமான அரங்கு அமைப்பாகும். இதில் பெண்களின் வகிபங்குகளில் நிபுணத்துவமடைந்த ஆண் நடிகர்கள 'onnagata' என அழைக்கப்படுகின்றனர். ஏனைய இரு பாரிய வகிபங்கு வகைகள் 'aragota' (கரடுமுரடான பாங்கு) மற்றும் 'wagoto' (மென்மையான பாங்கு) ஆகும். அவர்களது பால்நிலை நிச்சயமின்மைக்கும், பால்நிலை வகிபங்குகளை ஊடறுப்பதற்கான சாத்தியக்கூறுமே அவர்களில் வகிபங்குகளின் குணவியல்பு என்பதுடன், இது இரட்டை பெண்.˙.ஆண் பால்நிலை முறைமை குறித்து கேள்வியையும் விடுக்கின்றது. வரலாற்றுரீதியிலான நிகழ்வுகள் மற்றும் இதயத்தின் உறவுகளில் ஒழுக்கத்திலான மோதல் ஆகியன பற்றியதே Kabuki நாடகங்களாகும். இன்று ஜப்பானிய நாடகத்தின் பாரம்பரியமான பாங்குகளில் மிகவும் பிரசித்தமானதாக Kabuki விளங்குகினறது.



© Umemura Yutaka

அதேவேளை, புலப்படாத கலாசார மரபுரிமைப் பால்நிலைப் பாங்குகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. எனவே, பால்நிலைப் பாங்குகளுக்கும், புலப்படாத கலாசார மரபுரிமைக்கும் இடையில் பரஸ்பர உறவொன்று உள்ளது.

பேச்சுவார்த்தையிலான நடைமுறையிலும், யார் செல்வாக்கினைக் கொண்டுள்ளார் என்ற கேள்வியிலும் பயனுறுதிவாய்ந்த பங்கெடுப்பினை பால்நிலை-தொடர்பிலான மாற்றங்களுக்கான இன்னொரு காரணி கரிசனையைக் கொண்டுள்ளது. புலப்படாத கலாசார மரபுரிமையைப் பரப்புவதையும், பாதுகாப்பதையும் பற்றிய தீர்மானமெடுத்தல் வெற்றிடமொன்றில் இடம்பெறுவதில்லை, ஆனால், பால்நிலை மற்றும் அதிகார உறவுகளின் பாரிய முறைமையொன்றில் பதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாங்குகளும், உறவுகளும் நடத்தைகளையும்.'. உறவுகளையும் மற்றும் பேச்சுவார்த்தையிலான நடைமுறைகளையும் ஆட்சி செய்கின்றன. அதிகார உறவுகளில் பாரியளவிலான பங்கெடுப்பினையும், சமநிலையினையும் அனுமதிப்பதற்காக சனசமூகமொன்றினுள் அவை அடிக்கடி விசாரிக்கப்படுகின்றன.

*சைப்பிரஸில் 'கவிதைத்தனமான மற்போர்' என்ற அமைப்பொன்றே வுளயைவவளைவய ஆகும். இதில் புத்திசாலித்தனமான வாய்மொழியிலான கவிதையின் திடீர் ஆயுத்தப்படுத்தலுடன் இன்னொருவரை மிஞ்சுவதற்கு ஒரு கவிஞர்-பாடகர் முயல்வார். திருமணக் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் வேறு பொதுக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றில் பிரசித்தமான உறுப்பாக நீண்ட காலமாக வுளயைவவளைவய விளங்குகின்றது. இதில் செயற்படும்படி கவிஞர்களுக்கு ஆர்வமிக்க மக்கள் கூட்டம் ஊக்கமளிக்கின்றது. பாரம்பரியமாக ஆண்கள் மட்டுமே தமது கவிதையை வாய்மொழியாகப் பரப்பினார்கள். அண்மையில் ஒரு சில பெண் கவிஞர்களும் செயல்பாட்டினை ஆரம்பித்துள்ளனர்.*




© 2003 Larnaca Municipality - Photograph: Andreas Larkos



© 2003 Larnaca Municipality - Photograph: Andreas Larkos



© 2005 Department of Traditional Arts at the Research Center of ICHHTO Photograph: Sa'id Azadi



© 2005 Department of Traditional Arts at the Research Center of ICHHTOPhotograph: Nabiollah Giyahchi

*சகல மட்டங்களிலும் சமூகத்தில் முக்கியமான வகிபங்கொன்றை ஆற்றுகின்றவாறு, ஈரானில் நாடகப்பாணியிலான அரங்கேற்றத்தின் மிகவும் பழமைவாய்ந்த அமைப்பான Naqqāli கதைசொல்லுதலை பரப்புவதில் பால்நிலை வகிபங்குகள் மாற்றமடைந்துள்ளன. தற்போதைய நாட்களில், பெண் Naqqāliகள் கலப்பு ரசிகர்கள் முன்னிலையில் அரங்கேற்றுவதுடன், இது ஈரானில் வழமைக்கு மாறானதாகும். இதில் பெண்கள் வழமையாக பெண் ரசிகர்களுக்காக மட்டும் (தனித்து) அரங்கேற்றுகிறார்கள். அண்மைக்காலம் வரை, நாடோடிக் கதைகளினதும், இனத்துவப் புராண வரலாறுகளினதும் மற்றும் ஈரானிய கலாசாரப் பாரம்பரியத்தினதும் மிகவும் முக்கியமான பாதுகாவலர்களாக Naqqāli கள் கருதப்பட்டதுடன், இது தற்போது பெண்களினால் அடையத்தக்க விசேட சமூக அந்தஸ்தை அவர்களுக்கு வழங்குகின்றது.*

## பால்நிலைக் கருத்துருக்களின் பன்னிலையாக்கம்

சனசமூகத்திலிருந்து சனசமூகத்திற்கு புலப்படாத கலாசார மரபுரிமையானது வேறுபடுவதினால் பால்நிலைக் கருத்துருக்களும் சமவளவில் பன்னிலையானவையாகும். ஒரேயொரு பால்நிலையில் உலகளாவியரீதியில் சர்வவியாபகமான புரிந்துணர்வு இருக்கவில்லை. மென்மேலும், சனசமூகக் கண்ணோட்டத்திலிருந்து பால்நிலை வகிபங்குகளும், பெறுமதிகளும் பகுப்பாயப்பட வேண்டும். உதாரணமாக, மாற்றுப்பாலினத்தவர் மற்றும் இரட்டைத் தைரியமான மக்கள் உட்பட ஏழு வேறுபட்ட பால்நிலையினர் வரை சில பூர்வீக வட அமெரிக்க பழங்குடிக் குழுக்கள் அங்கீகரிக்கின்றன.

இன்று பெருமளவு ஐரோப்பிய மற்றும் ஆசிய சமூகங்கள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பால்நிலைக் குழுக்களை அங்கீகரிக்கின்றன. அனேகமாக வயதும், பால்நிலையும் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளன, உதாரணமாக, சிறுவர்களின் நடத்தை தொடர்பிலான, பால்நிலை தொடர்பிலான பாங்குகளும், எதிர்பார்ப்புகளும் விடலைப்பருவத்தினருக்கும், வயதுவந்தவர்களுக்கும் பிரயோகிக்கப்படுவதிலிருந்து வேறுபட்டதாகும். பால்நிலை வகிபங்குகளும், பெறுமதிகளும் சமூகமொன்றில் விருத்தியடையும் போது, அது நடைமுறைகளின் அனுசரிப்புகளுக்கும், புலப்படாத கலாசார மரபுரிமையின் வெளிப்படுத்தல்களுக்கும் இட்டுச்செல்கின்றன.

## பால்நிலைச் சமத்துவம்

சனசமூகங்களின் பால்நிலை உறவுகள் தொடர்ச்சியாக விருத்தியடைகின்றபோது, பால்நிலைச் சமத்துவத்தை நோக்கி நகர்வதற்கும் அத்துடன் புலப்படாத கலாசார மரபுரிமையின் நடைமுறைப்படுத்தல் ஊடாக பால்நிலை-அடிப்படையிலான பாரபட்சத்தினை வெற்றிகொள்வதற்கும் அவை வாய்ப்புகளை உருவாக்குகின்றன. சமத்துவமும், பாரபட்சமின்மையும் உள்மைய மனித உரிமைகள் தத்துவங்களாகும். பால்நிலைச் சமத்துவத்தையும், புலப்படாத கலாசார மரபுரிமையையும் கரிசனைக்கு எடுக்கும் போது, பால்நிலை வகிபங்குகளுக்கு இடையில் வித்தியாசங்கள் மீது மனித உரிமைகள் மனவுணர்வொன்று செறிந்திருக்கவில்லை, ஆனால், சம்பந்தப்பட்டுள்ளவர்களின் கௌரவத்தையும், சேமநலனையும் அவை மறுக்கின்றனவா என்பது மீது செறிந்திருக்கின்றன. பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தினை ஒழிப்பது மீதான சமவாயம் [Elimination of Discrimination Against Women (CEDAW)] அதுவாகவே பாரம்பரியமான கலாசார உளப்பாங்குகளை, நடைமுறைகளை அல்லது சவாலாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ள வேறுபடுத்தப்பட்ட வகிபங்குகளைக்கூட நோக்குவதில்லை. ஆனால், பதிலாக பெண்களை அதிகாரத்தை இழக்கச்செய்யும் அல்லது வேறு வகையில் அவர்களது அக்கறைகளுக்கு கெடுதல் செய்யும் விதத்தில் பெண்களுக்கான மாறாத்தன்மையிலான வகிபங்குகளைப் பிரயோகிப்பது போன்று, அவர்களிலிருந்து விளையக்கூடிய குறிப்பான மறுதலையிலான பின்விளைவுகளாக நோக்குகின்றன.

எனவே, பாரபட்சமற்ற கண்ணோட்டமொன்றிலிருந்து, பாரபட்சத்தினையும், கீழ்ப்படிவு நிலையையும் உள்ளடக்குகின்றதும், முன்னேற்றுகின்றதுமான பாரம்பரியமான கலாசார நடைமுறைகளின் அம்சங்களைப் பேணுவதற்கான வலியுறுத்தல்களின் செல்லுபடிதன்மை குறித்து கேள்வியெழுப்புவது பொருத்தமானதாகும். அத்தகைய நடைமுறைகளினால் ஓரங்கட்டப்படக்கூடியவர்களினதும், அதிகாரத்தை இழக்கச்செய்கின்றவர்களினதும் உரிமைகளுக்கு எதிராக அத்தகைய வலியுறுத்தல்கள் அளவிடப்பட வேண்டும். சில நடைமுறைகள் மனித உரிமைகள் கண்ணோட்டத்திலிருந்து வெளிப்படையாக ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஆனால், பெருமளவு ஏனையவை சாம்பல் பகுதியொன்றில் சார்ந்திருப்பதுடன், இதில் தனிப்பட்டவர்களுக்கான கெடுதலின் மட்டத்தை அடையாளங்காண்பது மிதமிஞ்சிய விதத்தில் சிக்கலாக விளங்க முடியும்.

அத்தகைய நிர்ணயங்களை யார், எப்போது செய்யவேண்டும் என்பதற்கான சிக்கல் நிறைந்த கேள்வியை இது எழுப்புகின்றது. பாரபட்சமின்மையின் தத்துவத்திற்கு அனுசரித்தும், சனசமூகத்தின் சேமநலனின் அக்கறைகளிலும் ஓரங்கட்டப்பட்ட அத்துடன்.்.அல்லது பால்நிலைப் பாரபட்சத்தினை குழுக்கள் உட்பட கரிசனையிலான சகல செயற்பாட்டாளர்களும் சம்பந்தப்பட வேண்டும். மறுபுறத்தில், இந்த சமூகக் குழுக்கள் தாமாகவே பாரபட்சத்திலான பாரம்பரியமான நடைமுறைகளுக்கு ஆதரவளிக்கவும், ஊக்கமளிக்கவும் கூட முடியும். இதற்கான காரணம் அனேகமாக நடைமுறையின் சமூகப் பணிக்கு தொடர்பினைக் கொண்டிருப்பதுடன், செயற்பாட்டில் பால்நிலை இயக்காற்றலைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தைக் கீழ்கோடிடுகின்றது. மனித உரிமைகளை நடைமுறையொன்றின் அம்சமாக மீறுகின்ற போது கூட, அது முக்கியமான சமூகப் பணியொன்றாக சேவையாற்றக்கூடும்.



© 2013 Cultural Heritage Administration

*MaendeleoYaWanawake (MYWO) என்ற கென்ய பெண்கள் தாபனமொன்று, பெண் பிறப்புறுப்பு சிதைப்பினைச் சம்பந்தப்படுத்திய வைபவமொன்றைக் கொண்டுள்ள சனசமூகங்களுடன் பணியாற்றியுள்ளதுடன், சடங்கின் திட்டமான சமூக-கலாசார அம்சங்களை வைத்திருக்கும் அதேவேளை மாற்று வைபவத்தினை விருத்திசெய்வதில் அவர்களுடன் இணைந்துள்ளது. பாரம்பரியத்தை மாற்ற வேண்டுமா, எவ்வாறு மாற்றுவது என்பன மீதான உள்ளீட்டினைத் திரட்டுவதற்காக தாய்மார்கள், யுவதிகள், தந்தைமார்கள் மற்றும் சனசமூகத் தலைவர்கள் ஆகியோரை பெண்கள் தாபனம் சந்தித்தது. பாரம்பரியமான வயதுக்கு வருதல் வைபவம், ஒதுக்கி வைத்தல், தகவலைப் பரிமாறுதல் மற்றும் கொண்டாட்டம் – ஆனால், பிறப்புறுப்பை சிதைப்பதில்லை என்ற சகல அம்சங்கள் உட்பட, மாற்று சடங்கொன்றை அவர்கள் வடிவமைத்தனர். இது Ntanira Na Mugambo – 'சொற்களினால் பிறப்புறுப்புச் சிதைவு' என அறியப்பட்டது. கென்யா, பெருவில் மாற்றுச்சடங்கு முதலில் முயற்சிக்கப்பட்ட போது, ஒதுக்கிவைத்தலில் 30 யுவதிகளைக் கொண்ட மொத்தமொன்றுடன் 12 குடும்பங்கள் மட்டுமே பங்கெடுத்தன. சனசமூகத்தில் இருந்த பெருமளவு மக்கள் அவநம்பிக்கையுடன் விளங்கியதுடன், மாற்றப்பட்ட பாரம்பரியம் உடனடியாகவே மறைந்துவிடும் என எண்ணினர். எனினும், வைபவம் மிக அதிகளவு கவனத்தை ஈர்த்தெடுத்ததுடன், இதன் பின்னர் ஆர்வமிக்க தனிப்பட்டவர்களிடமிருந்தும், குழுக்களிடமிருந்தும் MYWO குறித்து விசாரணைகள் கிடைக்க ஆரம்பித்தன, ஒரு வருடத்தினுள் மெருவில் (Meru) 11 அமைவிடங்களிலிருந்து 200 குடும்பங்கள் வைபவத்தின் மாற்றுச்சடங்குகளில் பங்கெடுத்துள்ளன.[1]*

புலப்படாத கலாசார மரபுரிமையில் பால்நிலை-அடிப்படையிலான பாரபட்சம் குறித்து பேசும் போது, அவற்றை ஒரு பால்நிலைக் குழு பின்பற்றுகின்றது என்ற அடிப்படையின் மீது வெறுமனே நடைமுறையைக் கழித்து விடுகின்ற மிதமிஞ்சிய எளிமையான நோக்கொன்றைத் தவிர்ப்பதற்கு மிக அதிகளவு கவனம் அவசியமானதாகும். உலகம் பூராவும் பெருமளவு – இல்லையொன்றால் அனேகமான - சமூகங்களில் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையைக் கொண்ட சமூக மற்றும் கலாசார நடைமுறைகள் விலக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் (வயது, பால்நிலை மற்றும் வேறு மூலப்பிரமாணம் ஆகியவற்றின் அடிப்படையின் மீது), பாரபட்சம் இடம்பெறுகின்றது என்ற சமிக்ஞையொன்றாக இது மட்டும் எடுக்கப்படலாகாது. பால்நிலை அடிப்படையிலான பகுப்பாய்வொன்றின ஊடாக மட்டுமே தமது புலப்படாத கலாசார மரபுரிமை, சமூக நடைமுறை, சடங்கு, செய்நுட்பவறிவு, வாய்மொழியிலான பாரம்பரியம் போன்றன உண்மையாகவே பாரபட்சமானவை என்பதை சனசமூகங்கள் அடையாளங்காண முடியும். மென்மேலும், அடையாளங்காண்பதற்கு பாரபட்சத்திலான அம்சங்களுக்கு பால்நிலைப் புறம்பாக்கல் சம்பந்தப்பட வேண்டும் என்பது அவசியமில்லை.

மனித உரிமைகளுக்கான அர்ப்பணிப்பு புலப்படாத கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பதற்கான சமவாயத்தில் (இதன் பின்னகத்து சமவாயம்) தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சர்வதேச மனித உரிமைகள் தரங்களுடன் இணங்குகின்ற புலப்படாத கலாசார மரபுரிமை மட்டுமே சமவாயத்தின் விரிவெல்லையினுள் கரிசனைக்கெடுக்கப்பட முடியும் (உறுப்புரை 2.1).

1. MaendeleoYaWanawake Organization. 2002. Evaluating Efforts to Eliminate the Practice of Female Genital Mutilation. Raising Awareness and Changing Harmful Norms in Kenya, Washington DC: PATH.

## பாதுகாப்பதில் பால்நிலை

பால்நிலை உறவுகளுக்கும், புலப்படாத கலாசார மரபுரிமைகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவினைப் புரிந்துகொள்ளும் போது, அது பயனுறுதிவாய்ந்த விதத்தில் பாதுகாப்பதற்கான புதிய வழிகளைத் திறக்க முடியும். இது தொடர்பில், பாதுகாப்பதில் சனசமூகத்தின் மைய வகிபங்கு மீதான வலியுறுத்தல் ஒரு முக்கியமான வாய்ப்பாகும். சனசமூகங்களும், குழுக்களும் ஒருபடித்தானவை அல்ல என்பதனால், பால்நிலைக் கரிசனைகளுக்கு உரிய கவனத்தைச் செலுத்தி, குறிப்பான புலப்படாத கலாசார மரபுரிமை தொடர்பில், செயற்பாட்டாளர்களின் பன்னிலைத்தன்மையையும், அவர்களின் வகிபங்குகளையும் அடையாளங்காண்பது முக்கியமானதாகும். இல்லாவிடில், பயனுறுதிவாய்ந்த பாதுகாக்கும் அபாயத்திற்கான புதிய சாத்தியக்கூறுகள் தொடர்ந்துமே மறைக்கப்பட்டதாகவும், தொட்டுணரப்படாததாகவும் விளங்கும்.

பால்நிலையும், புலப்படாத கலாசார மரபுரிமையும் சிக்கல்தன்மையிலும், மட்டமொன்றுக்கு, இயற்றுதல், நடைமுறை, பரப்புதல் ஆகியவற்றின் ஊடாக பரஸ்பர வழிகளிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதுடன், ஆதலால் பால்நிலை உறவுகள் மீது தாக்கத்தைக் கொண்டிருப்பதிலும் அத்துடன் சனசமூகங்களினதும் மற்றும் அவற்றின் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் அல்லது உப குழுக்களினதும் நிலைமையையும், அங்கீகாரத்தையும் பலப்படுத்துவதிலும், பலவீனப்படுத்துவதிலும் பாதுகாக்கும் அணுகுமுறைகள் கொண்டுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஒரு தொகையைக் கொண்ட பாதுகாக்கும் நடவடிக்கைகளை சமவாயம் நடப்பதை முன்னறிகின்றது. தேசிய மட்டத்தில், புலப்படாத கலாசார மரபுரிமையை அடையாளங்காணுதல் அத்துடன் பொருட்பட்டியல்படுத்தல், நிறுவனரீதியிலான கொள்கை மற்றும் சட்ட வரைச்சட்டங்களைத் தாபித்தல் அத்துடன் பாதுகாக்கும் திட்டங்களையும், ஆராய்ச்சியையும் மற்றும் விழிப்பியலை உயர்த்துவதையும் அத்துடன் கல்விசார் முன்னெடுப்புகளையும் விருத்திசெய்தல் ஆகியனவற்றை அவை உள்ளடக்குகின்றன. சர்வதேச மட்டத்தில், பாதுகாப்பதற்கும் அத்துடன் சிறந்த பாதுகாக்கும் நடைமுறைகளைப் பதிவுசெய்வதற்கும், சமவாயத்தின் பட்டியல்கள் அல்லது முன்மொழிவுகள் மீது எழுத்துப் பொறிப்புக்களுக்கான நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்கும் சர்வதேச உதவியை அரசுகள் கட்சிகள் கோரலாம்.

## அடையாளங்காணலில் பால்நிலை

புலப்படாத கலாசார மரபுரிமையை (மீள்) உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்குமான பெண்களின் பங்களிப்புக்களின் புலப்படாத்தன்மையே சமவாயத்தை அமுலாக்குவதில் உள்ள ஒரு பாரிய பிரச்சனையாகும். இது சமூகத்தின் ஓரங்கட்டப்பட்ட உறுப்பினர்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது.[2] அவர்களது பங்களிப்பு தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் அபூர்வமாகவே அங்கீகரிக்கப்படுகின்றது. சில வேளைகளில், ஓரங்கட்டப்பட்ட பால்நிலைக் குழுக்களின் புலப்படாத கலாசார மரபுரிமையுள்ள இடைவெளிகள், சமூகம் அவற்றைச் செயற்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற சமூகத்தில் உள்ள ஒரேயொரு சமூக இடைவெளிகளாக விளங்குகின்றன. எனவே, தேசிய மட்டத்தில் புலப்படாத கலாசார மரபுரிமையை அடையாளங்காண்பதில் பால்நிலையிலான பாரபட்சமொன்று சில பால்நிலைக் குழுக்களின் மரபுரிமை உதாசீனம் செய்யப்படுகின்றது என்ற அபாயத்தைக் கொண்டுள்ளது.

*அவுஸ்திரேலியாவின் பழங்குடி பெண்களினால் தாபிக்கப்பட்டதும், வழிநடத்தப்பட்டதுமான வானி (Waanyi) பெண்கள் வரலாற்றுக் கருத்திட்டமானது அவர்கள் தொடர்பான மரபுரிமையை அங்கீகரிப்பது மீதும் அத்துடன் மரபுரிமை அடையாளங்காணலிலும், முகாமைத்துவத்திலும் செயற்படும் பால்நிலையையும், வேறு பாரபட்சங்களையும் கவனமெடுப்பதன் மீதும் நோக்கினைக் கொண்டுள்ளது. தமது மரபுரிமை பற்றிய தமது கரிசனைகளுக்கு அரசாங்கத் திட்டங்களில் போதியளவு கவனம் அல்லது சட்டபூர்வதன்மை வழங்கப்படவில்லை என பெண்கள் கருதினார்கள். தமது குரல்களை செவிமடுக்கச் செய்வதற்காக மூலோபாயமொன்றை அவர்கள் விருத்திசெய்ததுடன், அங்கீகாரத்தைப் பெறுவதில் வெற்றியும் அடைந்தார்கள்.*[3]

**2.** Document ITH/13/8COM/INF.5.c.
**3.** Smith, L., Morgan, A. and van der Meer, A. 2003. Community-driven Research in Cultural Heritage Management: The Waanyi Women's HistoryProject. International Journal of Heritage Studies, Vol. 9, No. 1.



© UNESCO – Photograph: Fumiko Ohinata

## பொருட்பட்டியல்படுத்துவதில் பால்நிலை

இதேபோல, புலப்படாத கலாசார மரபுரிமையையும், தொடர்பான ஆராய்ச்சியையும், ஆவணப்படுத்தலையும் பொருட்பட்டியல்படுத்தலானது புலப்படாத கலாசார மரபுரிமையில் பெண்களினதும், ஓரங்கட்டப்பட்ட குழுக்களினதும் பங்களிப்பினை அமைதியாக்கும் அல்லது தப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது. சமவாயத்தின் பிரகாரம், கரிசனையிலான சனசமூகங்களின் முழுமையான சம்பந்தப்படுத்தலுடன் புலப்படாத கலாசார மரபுரிமையைப் பொருட்பட்டியல்படுத்தல் பொறுப்பேற்கப்பட வேண்டும். எனவே, பால்நிலையைப் பொறுத்தளவில் சனசமூகத்தின் முழுப் பிரதிநிதித்துவமும் எந்த அளவுக்கு சம்பந்தத்தைக் கொண்டுள்ளது என்பதை சனசமூக அடிப்படையிலான பொருட்பட்டியல்படுத்தலுக்கான பயிற்சியும், ஆதரவும் பொறுப்புக்கு எடுப்பது அவசியமாகும். இந்த நடைமுறை ஊடாக, பரந்த வீச்செல்லையைக் கொண்ட புலப்படாத கலாசார மரபுரிமை அடையாளங்காணப்பட முடியும் என்பதுடன், பரப்புவதற்கும், பாதுகாப்பதற்கும் அடிப்படையாகவுள்ள சில பால்நிலை அடிப்படையிலான அனுமானங்கள் கண்களுக்கு புலப்படச் செய்யப்படவும் முடியும்.

## பாதுகாக்கும் திட்டங்களில் பால்நிலை

புலப்படாத கலாசார மரபுரிமைக்கான பாதுகாப்புத் திட்டங்களின் விபரிப்பானது குறிப்பான புலப்படாத கலாசார மரபுரிமையின் எதிர்காலக் கருத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற தீர்மானமான தருணமொன்றாகும். குறிப்பிட்ட நடைமுறையில் முக்கியத்துவத்தையும் மற்றும் கருத்தினையும், அது வெளிப்படுத்தப்பட்டுள்ள அபாயங்களையும் மற்றும் அச்சுறுத்தல்களையும், அவற்றைக் கவனத்திற்கெடுப்பதற்கான மூலோபாயங்களையும் மற்றும் நடவடிக்கைகளையும் அத்துடன் இணைந்துள்ள மனித மற்றும் நிதிசார் வளங்களையும் சனசமூகங்கள் பிரதிபலிக்கின்றன. சனசமூகமொன்றின் சகல உறுப்பினர்களுக்கும் நன்மையாக இந்த நடைமுறை விளங்குவதற்கு, வேறுபட்ட வயதையும், பால்நிலையையும் கொண்ட குழுக்களின் குரல்கள் பொறுப்புக்கு எடுக்கப்பட வேண்டும். முதலாவது இடத்தில், பால்நிலை மற்றும் பால்நிலை வகிபங்குகள்

ஆகியன குறித்த தமது சொந்தப் புரிந்துணர்வையும், அத்துடன் மரபுரிமைக்கு அது எவ்வாறு தொடர்பைக் கொண்டுள்ளது என்பதையும் சனசமூகங்கள் தாமாகவே உச்சரிக்க வேண்டும். பாதுகாப்பதில் எவ்வாறு பால்நிலைக் கண்ணோட்டத்தை ஒன்றிணைப்பது மீது தமது கண்ணோட்டங்களையும், முறைமையியல்ரீதியிலான அறிவையும் அரசாங்க அதிகாரவர்க்கமும், சிவில் சமூகத் தாபனங்களும், நூற்கல்வி நிறுவனங்களும் மற்றும் ஆராய்ச்சிச் சமூகமும் பங்களிக்கக்கூடியதாக இருக்கும். வெற்றிகரமான பாதுகாக்கும் திட்டமொன்றுக்கு பங்களிக்கும் பால்நிலை வகிபங்குகள் மற்றும் பால்நிலை குறிப்பான நடவடிக்கைகள் ஆகியன உட்பட வேறுபட்ட பால்நிலை வகிபங்குகளையும், நடவடிக்கைகளையும் குறித்து சனசமூகத்தினாலும், சனசமூகம் சாராத செயற்பாட்டாளர்களினாலும் பாராட்டப்படுவதே ஒரு முக்கிய ஆக்கக்கூறாகும்.



© 2012 agency for Cultural Affairs

## கொள்கை முன்னேற்றத்தில் பால்நிலை

பால்நிலைக்கும், புலப்படாத கலாசார மரபுரிமைக்கும் இடையிலான பரஸ்பர உறவு மீது புலப்படாத கலாசார மரபுரிமைக்கான கொள்கைகள் கட்டப்படுவதென்றால், பாதுகாப்பதற்கான கொள்கை வகுத்தல் கரிசனையைக் கொண்ட சகல பால்நிலைக் குழுக்கள் உட்பட பன்னிலையிலான குரல்களைக் கொண்ட தீவிரமான பங்கெடுப்பினை உறுதிப்படுத்த வேண்டும். ஒரு சில சனசமூக உறுப்பினர்களுக்கு, வெளியிலான நிபுணர்களுக்கு அல்லது அரசாங்க முகவராண்மைகளுக்கு இப்பணியை விட்டுவைத்தால் அது அபாயத்திலானதாகும். சமவாயத்தின் பிரகாரம் (உறுப்புரை 2.1), புலப்படாத கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பதில் மனித உரிமைகளினதும் (பால்நிலைச் சமத்துவம் உட்பட), நிலைத்திருத்தல் அபிவிருத்தி மற்றும் பரஸ்பர மரியதை ஆகியவற்றினதும் தத்துவங்களைப் பேணுவதற்கும் அத்துடன் ஏதேனும் வடிவத்தைக் கொண்ட அரசியல், சமூக, இனத்துவ, மத, மொழிசார்ந்த அல்லது பால்நிலை அடிப்படையிலான பாரபட்சத்தினை நியாயப்படுத்துவதற்கு விழிப்பியலை உயர்த்தும் நடவடிக்கைகள் பங்களிக்கமாட்டா என்பதை



© 2012 by Firoz Mahmud - Photograph: Murshid Anwar

உறுதிப்படுத்தும் (செயற்பாட்டிலான பணிப்புரைகள் 102) வழிகளை கொள்கை வகுத்தல் மென்மேலும் முன்னேற்ற வேண்டும். CEDAW மற்றும் அதன் விருப்பிலான மேலதிக விதிகள்[4] போன்ற பால்நிலைச் சமத்துவம் தொடர்பிலான சர்வதேசக் கருவிகள் பயனுள்ள உசாத்துணைகளாக விளங்க முடியும். மென்மேலும், உள்ளடங்கலாகவும், பயனுறுதிவாய்ந்ததாகவும் கொள்கை பணி விளங்குவதற்கு, நாடொன்றின் பிரதேசத்தில் நிலவுகின்ற பால்நிலை-தொடர்பிலான நடைமுறைகளின் பரவலாக்கத்தை பொறுப்புக்கு எடுப்பதும் அவசியமாகும்.

4. Convention on the Elimination of All Forms of Discrimination Against Women and its Optional Protocol, see: http://www.ohchr.org/EN/HRBodies/CEDAW/Pages/CEDAWIndex.aspx.

## சர்வதேச சாசனங்களில் பால்நிலை

அதிகரித்தளவில், தசாப்த காலத்திற்கு மேலாக, சாசனங்கள் தொடர்பில், புலப்படாத கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பதற்கான அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் விவாதங்களிலும், தீர்மானங்களிலும் பால்நிலைக்கான மேற்கோள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சில நியமனக் கோவைகளில் பால்நிலை வகிபங்குகளின் விவரணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை, நியமங்களின் பால்நிலை குறித்து போதியளவு குறிப்பிடாதது தொடர்பில் ஆலோசனை உறுப்புக்கள் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளன. மேலதிகமாக, பால்நிலைக்கு உரிய கவனத்தைச் செலுத்தி, குறிப்பான புலப்படாத கலாசார மரபுரிமை தொடர்பில் செயற்பாட்டாளர்களின் பன்னிலையாக்கத்தையும், அவர்களது வகிபங்குகளையும் விபரிப்பதற்கு அரசுகளாம் கட்சிகளுக்கு அவை ஊக்கமளித்துள்ளன.[5]

## பால்நிலையை பிரதான நீரோட்டப்படுத்தல்

பால்நிலை பற்றி சமவாயத்தின் வாசகம் வெளிப்படையானது அல்ல என்ற அதேவேளை, பால்நிலைப் பிரச்சனைகளுக்கு அதிகரித்தளவிலான கவனத்தை ஆளுகின்ற உறுப்புக்கள் வழங்கியுள்ளதுடன், வடிவமைக்கப்பட்ட ஆக்கக்கூறுகளின் நிலை மீது அறிக்கையிடும் போது ‘பால்நிலையின் வகிபங்குக்கு விசேட கவனத்தை செலுத்துமாறு’ அரசுகளைக் கோரியுள்ளது.[6] அவர்களது கோரிக்கையின் பேரில், சமவாயத்தை அமுலாக்குவது மீது அரசுகளாம் கட்சிகளில் சர்வதேச ஒத்துழைப்பு பொறிமுறைகள் மற்றும் காலா காலத்திலான அறிக்கையிடல் ஆகியன தொடர்பில் சகல படிவங்களும், அறிவுறுத்தல்களும் பால்நிலைக்கான மேற்கோள்களை தற்போது கொண்டுள்ளதுடன், இதன் பிரகாரம், சமவாயத்தின் செயற்பாட்டிலான அறிவுறுத்தல் திருத்தப்பட்டுள்ளது. மென்மேலும், சமவாயத்தின் அமுலாக்கத்திற்கான UNESCOஇன் உலகளாவிய ஆற்றலளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டமானது பாதுகாப்பதற்கான பால்நிலை-பதிலிறுப்பு அணுகுமுறைகள் மீது பயிற்சியையும், கொள்கை ஆலோசனையையும் உள்ளடக்குகின்றது. இரு வழிகளில் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்புக்காக பால்நிலைக்கும், புலப்படாத கலாசார மரபுரிமைக்கும் இடையிலான உறவினைப் புரிந்துகொள்ளுதல் குறிப்பிடத்தக்கதாகும்: இது பாதுகாப்பதற்கான புதிய வழிகளை ஆரம்பிக்க முடியும் என்பதுடன், பால்நிலைச் சமத்துவத்தை நோக்கி நடவடிக்கைகளைப் பலப்படுத்த முடியும். எனவே, பாதுகாப்பதில் பால்நிலையை பிரதான நீரோட்டப்படுத்தல் ஒரு வாய்ப்பு அல்ல, ஆனால், ஒழுக்கத்திலான தட்ட முடியாததாகும்.

*Tallyஇல் கலையை ஆவணப்படுத்துவதிலும், அதைப் பாதுகாப்பதில் மேல் எகிப்தில் உள்ள பெண்களைப் பயிற்றுவிப்பதிலும் உதவுமாறு ஓர் அரசாங்க சார்பற்ற தாபனமான நாடோடி பாரம்பரியங்களுக்கான எகிப்திய சமூகம் என்ற தாபனத்தை தேசியப் பெண்கள் பேரவை பாரப்படுத்தியது. முதலாவது பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் 300க்கு மேற்பட்ட பெண்கள் பங்கெடுத்ததுடன், இது பின்னர் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்ந்தது. அவர்களுக்கு முக்கியமாக, ஆனால் பாரதூரமான விதத்தில் அச்சுறுத்திய இந்த குறிப்பான புலப்படாத கலாசார மரபுரிமையை மீள்-வீரியமூட்டுவதற்கு அப்பியாசத்தில் பெண்களுக்கு இருந்த பலமான அக்கறை இட்டுச்சென்றது.*



**5.** Document ITH/13/8COM/7.
**6.** Decision 9.COM 13.a in Document ITH/14/9COM/Decisions.



©2013 Ministry of Culture and Information of the Republic of Kazakhstan







புலப்படாத
கலாசார
மரபுரிமை

ICH

The designations employed and the presentation of material throughout this publication do not imply the expression of any opinion whatsoever on the part of UNESCO concerning the legal status of any country, territory, city or area or of its authorities, or the delimitation of its frontiers or boundaries.

The authors are responsible for the choice and the presentation of the facts contained in this book and for the opinions expressed therein, which are not necessarily those of UNESCO and do not commit the Organization.

The present translation has been prepared under the responsibility of the International Information and Networking Centre for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region under the auspices of UNESCO (ICHCAP) and Sri Lanka National Commission for UNESCO.

United Nations
Educational, Scientific and
Cultural Organization

ichcap
International Information and Networking Centre
for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region
under the auspices of UNESCO

United Nations
Educational, Scientific and
Cultural Organization

Sri Lanka
National Commission
for UNESCO

© Myriam Jégat, 2009